# வ்யாஸ பூஜை, சாதுர்மாஸ்யவ்ரத ஸங்கல்ப மஹோத்ஸவம்

மற்றும்

# ஸ்ரீஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் 74-ஆவது ஜயந்தி விழா

சங்கரம் சங்கராசார்யம் கேசவம் பாதராயணம்|
ஸூத்ர பாஷ்யக்ருதௌ வந்தே பகவந்தௌ புந: புந: ||

அன்டையீர்!

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீட பூஜ்ய ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இருவரும் ஸர்வதாரி வருஷ வ்யாஸ பூஜையையும், சாதுர்மாஸ்ய வ்ரத ஸங்கல்ப மஹோத்ஸவத்தையும் ஆடி மாதம் 3–ஆம் தேதி வெள்ளி (18–07–2008) துவங்கி ஆவணி மாதம் 31–ஆம் தேதி திங்கள் (15–09–2008) முடிய காஞ்சீபுரம் ஸ்ரீ சங்கரமடத்தில் அனுஷ்டிக்க உள்ளார்கள். இந்த மஹோத்ஸவம் ஆடி மாதம் 13–ஆம் தேதி (18–07–2008) வெள்ளிக்கிழமை அன்று வ்யாஸ பூஜையுடன் ஆரம்பமாகிறது.

குருவந்தனத்திற்குரிய நாள் குருபூர்ணிமா நாள். குருவருள் பெருகி வரும் திருநாள். வேதம் துவங்கி எல்லா சாஸ்திரங்களையும், தார்மிக வாழ்க்கை முறையையும் செப்பனிட்டுக் கொடுத்தவர் வேத வ்யாஸர். மனித குல மேம்பாட்டையே தனித்த லக்ஷ்யமாகக் கொண்டவர். அவரது தியாக வாழ்வுக்குத் தியாக சீலர்களான யதிவரர்கள் மூலம் நாம் செலுத்தும் நன்றிக் கடனே வ்யாஸ பூஜா. நமது குருபரம்பரைக்கும் மூலவேர் வ்யாஸ மஹரிஷி.

சூரியனின் பிரகாசத்தை வாங்கிக் குளிரக்கொடுக்கும் சந்திரன் போல் ஆத்ம சூரியனின் ஞான பிரகாசத்தைக் குருமூலம் பெற்று நம்மை அகமும் புறமும் குளிரக் கடாக்ஷிக்கும் கருணா சந்த்ரர்கள் இக்குருவரர்கள். இவர்களைப் போற்றுவது நம் கடமை. அக்ஞான இருள் நீக்கும் மெய்ஞான தீபங்களை வணங்குவது நமது பெரும்பாக்யம்.

சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் அத்வைத வேதாந்த ஸதஸ், வேதவித்வத் ஸதஸ், வேதபாராயணம், வேதபாஷ்ய ஸதஸ், அக்னி ஹோத்ர ஸதஸ், பஞ்சாங்க ஸதஸ் முதலியன நடைபெறும். மாலை மற்றும் இரவு நேரங்களில் சிறந்த இன்னிசைக் கச்சேரிகளும், உபன்யாஸங்களும் நடைபெற இருக்கின்றன. இவை பற்றிய விவரங்கள் தனியே இணைக்கப்பட்டுள்ளன.

**நமது அக இருள் புற இருள் இரண்டையும் நீக்க இருள் நீக்கியில் உதித்த ஞானப் பேரொளி, கருணைக் கதிரவன் ஸ்ரீஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் 74–ஆவது அவதார தினப்பெருவிழா ஸ்ரீமடத்தின் வளாகத்தில் ஆடி மாதம் 5–ஆம் தேதி ஞாயிறு அவிட்ட நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் (20–07–2008) மிகச் சிறப்பாக நடைபெற இருக்கிறது.**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் பக்தர்களும் மற்ற அன்பர்களும் எல்லா வைபவங்களிலும் பங்கு கொண்டு ஸ்ரீயதிவரர்களின் அனுக்ரஹத்திற்கும், ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர ஸ்வாமியின் க்ருபைக்கும் பாத்திரர்களாகும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் ஸ்ரீமடத்தின் பணியில்

P. Neelakantan

ஸ்ரீகார்யம் & ஏஜெண்ட்

வைசாக சுக்ல ஸப்தமி
ஸ்ரீ சாங்கரஸம்வத்ஸரம் 2518